**வென்னப்புவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சமுதாய அடிப்படை சங்கமொன்றின் நீர் குழாய் தொகுதியொன்றை சீர் செய்ய நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 1,099,999 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நீர் குழாய் தொகுதியின் உரிமையை கண்டறிந்து ஜர்னல் குறிப்பினூடாக சொத்துக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | செயலற்ற 03 நடைமுறை கணக்குகளின் ரூபா 1,414,146 தொகை பல வருடங்களாக கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஏனைய வெளிப்படுத்தல்களின் ஊடாக அறிக்கை இடப்பட்டுள்ளது. |
| (iii) | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 853,406 காணி மற்றும் கட்டிடங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வின் சுட்டிக்காட்டலிற்கு அமைய திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 875,959 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரண இருப்பொன்று, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஜர்னல் குறிப்பினூடாக திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டில் 29 ஊழியர்களிடமிருந்து கிடைத்த பிணை ரூபா 25,150 இனை முதலீடு செய்யாது ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்குகளில் அட்டுறு செய்யப்பட்டு தற்போது முதலீட்டு செய்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (vi) | சபைக்கு சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 128 காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை சுவீகரித்து மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகளையும் புதிதாக மீள்மதிப்பீடு செய்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (vii) | கடந்த ஆண்டு கடன்கொடுனர் ஆக்கப்பட்டு மீளாய்வாண்டு வேலைகள் பூர்த்தியான ரூபா 30,948,825 ஆன 20 நிர்மாணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அச் செலவுகள் அனைத்தையும் ஜர்னல் குறிப்பினூடாக மூலதனமாக்கி 2020 கணக்குகளினூடாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். |
| (viii) | கடந்த ஆண்டு பெற வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திர வைப்பு ரூபா 508,375 மீளாய்வாண்டளவில் பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சுற்றாடல் அனுமதிப்பத்திர பெறுமதி தற்போது வருமானத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. |
| (ix) | பெறுமதி ரூபா 27,784 ஆன 05 களஞ்சிய உருப்படிகள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்விடுபடலை ஜர்னல் குறிப்பினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (x) | ரூபா 57,400 ஆன 08 டயர்கள் கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்விடுபடலை ஜர்னல் குறிப்பினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xi) | மீளாய்வாண்டில் முக்கிய 05 ஜர்னல் குறிப்புக்கள் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் தயாரிக்கும் போது முக்கிய ஜர்னல் குறிப்புக்கள் காட்டப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட ஜர்னல் குறிப்புக்கள் 2020 ஆண்டில் சரியாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 10 கணக்கு விடய மீதிகள் மற்றும் பி.ச. 19 பிரகார மீதிகளிற்கிடையில் | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளை சரி | பி.ச. 19 ஊடாக ஆண்டின் உள்ளவாறான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 64,685,438 ஆன வித்தியாசம் நிலவியது. | செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானத்தை காட்டிய போதும் நிதிக்கூற்றுக்களின் மூலம் பில்லிடப்பட்ட (அட்டுறு) வருமானம் காட்டப்படுவதால் அதன் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. |
| (ii) | செலுத்த வேண்டியதனுள் காணப்படும் ஏனைய செலுத்த வேண்டியவை எனும் பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி மற்றும் கடந்த ஆண்டு இறுதி மீதிக்கிடையில் ரூபா 196,452 ஆன வித்தியாசம் ஆனது. | பிழைகளை சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வின் சுட்டிக் காட்டலை ஏற்றுக் கொள்கிறேன். இது ஆரம்ப மீதியை பேரேட்டிற்கு பிரதி செய்கையில் ஏற்பட்டுள்ள பிழையாகும். |

**(இ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை.**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | தயாரிக்கப்பட்ட கணக்கினுள் வருமான செலவுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த கணக்கு பேரேட்டினுள் காட்ட வேண்டும். | பிரதான பேரேட்டில் காட்டப்படாத போதும் கனணி ஊடக வருமான செலவுக் கணக்கொன்று தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பிரதேச சபையினால் பி.ச. பதிவேடுகள் நாளாதுவரையாக பேணப்பட்டிருக்காததுடன், பிரதான பேரேட்டில் காட்ட வேண்டிய வருமான செலவுக் கணக்கு மற்றும் ஏனைய பேரேட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பதிவேடுகள் நாளாதுவரையாக பேணப்பட வேண்டியதுடன், பிரதான பேரேட்டுக் கணக்கை பேண வேண்டும். | உப அலுவலக மட்டத்தில் பி.ச. பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2020 ஆண்டு முதல் வருமான விடயத்திற்கான கணக்கு பிரதான பேரேட்டில் பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமை கூற்றில் ஏனைய நடைமுறை சொத்துக்களினுள் நீண்ட காலமாக பெற வேண்டியதாகவுள்ள ரூபா 150,098,398 ஆன 08 இனங்காணாத மீதிகள் காணப்பட்டன. | இனங்காணாத மீதிகளை விரைவில் இனங்காண மற்றும் தேவையான சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நானாவித அறவிட வேண்டிய மீதியை தீர்க்க குழுவொன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது சிக்கலான செயற்பாடு ஆகையால் சிறிது காலம் கடந்த போதும் |

| | | |
|---|---|---|
| | | விரைவில் முடிவுறுத்தி கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். |
| (ii) நிதி நிலைமை கூற்றில் செலுத்த வேண்டியதனுள் நீண்ட காலமாக இனங்காணாத ரூபா 61,147,939 ஆன மீதியொன்று காணப்பட்டது. மேலும் ரூபா 28,334,584 ஆன வைப்பு தொகையிலிருந்து மீண்டும் செலுத்தக் முடியுமான வைப்புக்களை இனங்கண்டு மீண்டும் செலுத்த அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதியையும் தீர்க்க குழுவொன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது சிக்கலான செயற்பாடு ஆகையால் சிறிது காலம் கடந்த போதும் விரைவில் முடிவுறுத்தி கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். |

(உ) **கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 676,820,960 ஆன 13 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் மற்றும் புத்தககங்களை நாளாதுவரையாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது குறித்த பதிவேடுகள் நாளாதுவரையாக்கப்படுகின்றது. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமையை கணக்காய்வின் அவதானிக்கப்பட்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) 128 பிரிவு | சபையினால் பயன்படுத்தப்படும் 53 ஆதனங்களில் உரிமையை சுவீகரித்திருக்கவில்லை. | சட்ட விதிகளின் பிரகாரம் சுவீகரிக்க வேண்டும். | ஆதனங்களை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றன. |
| (ii) 129(2)(ஊ) . பிரிவு | பிரதேச சபைக்குக பெற வேண்டிய ரூபா 4,572,298 குத்தகை வாடகை மற்றும் | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட | தற்போது வாடகை உரிய முறைப்படி அறவிடப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | கடையறை வாடகை முறையாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (iii)134 பிரிவு | அதிகார எல்லையில் அமைந்துள்ள முன்னேற்ற பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டிருக்கவில்லை. இறுதியாக 2008 ஆண்டு இனங்கண்டு 2011 ஆண்டு நடைமுறைப்படுத்தி இருந்தது. | புதிய வருமான மூலங்களை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகார பிரதேசத்தை புதிதாக கணிப்பிட தேவையான நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றன. |
| (iv)136 பிரிவு | நிலுவை வீதவரி ரூபா 3,632,922 மற்றும் நிலுவை ஏக்கர் வரி ரூபா 2,032,013 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை குறைத்துக் கொள்ளவும், நீண்ட காலமாக அறவிடப்படாத மீதிகளிற்கு மாற்று முயற்சிகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (v) 143 பிரிவு | பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொறு 05 வருடத்திற்கு ஒரு முறை மதிபபிட்டு வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | புதிய மதிப்பீட்டின் படி வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அறவிடும் வீதவரி மற்றும் புதிதாக இனங்கண்ட ஆதனங்கள் உள்ளிட்ட பட்டியல் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (vi)159(i)பிரிவு | சபைக்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதில் ரூபா 4,572,298 ஆன அறவிட வேண்டிய பணத்தை அறவிட ஆதனத்தை தடை செய்து கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை கடைபிடித்திருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிட வேண்டிய வாடகை தொகையை அறவிட அல்லது மாற்று (சட்ட) நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (vii)159(4) பிரிவு | கொடுப்பனவை புறக்கணிக்கும் வியாபாரம் மற்றும் கைத்தொழில் வரி தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்<br>-------------------------------- | | | |
| | (i) இலக்கம் 5(7) விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை பலப்படுத்த வேண்டும். | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வொன்று தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. |
| | (ii) இலக்கம் 163 விதி | வருமான பொழிப்புப் பதிவேட்டை உரிய விதி பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. | உரிய பதிவேடு நடாத்தப்பட வேண்டும். | வருமான பொழிப்புப் பதிவேட்டை உரிய விதி பிரகாரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (iii) இலக்கம் 194 விதி | பி.ச. 45 பிரகாரம் பொருட் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடு நடாத்தப்பட வேண்டும். | கருத்துத் தெறிவிக்கப்படவில்லை. |
| | (iv) இலக்கம் 195 விதி | நுகர் களஞ்சிய பண்டங்களிற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடு நடாத்தப்பட வேண்டும். | கருத்துத் தெறிவிக்கப்படவில்லை. |
| | (v) இலக்கம் 218 விதி | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடமும் ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை பரீட்சிக்க பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 133,088,555 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 167,577,374 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 1,414,145 ஆன 03 வங்கி நடைமுறைக் கணக்குகள் நீண்ட காலமாக செயலற்று காணப்பட்டன. | செயலற்ற வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது கருத்திட்டங்கள் முடிவடைந்துள்ள நடைமுறைக் கணக்குகளை மூடிவிட்டு தேவையான சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 18,179 | 17,325 | 9,338 | 4,542 | 15,929 | 17,025 | 18,834 | 3,765 |
| (ii) | வாடகை | 38,835 | 36,902 | 36,332 | 4,572 | 43,075 | 40,922 | 36,951 | 3,916 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,250 | 1,599 | 1,599 | 508 | 4,774 | 3,960 | 3,960 | 508 |
| (iv) | ஏனைய வருமானம் | 347,389 | 333,106 | 366.663 | 135,806 | 296,156 | 289,422 | 326,755 | 191,490 |
| | கூட்டுத் தொகை | 408,653 | 388,932 | 413,932 | 145,428 | 359,934 | 351,329 | 386,500 | 199,679 |

- ❖ சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளன.
- ❖ ஆண்டில் பிரதேச சபை நிலுவை சேகரிப்பு தொடர்பாக சரியாக உபயோக பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
- ❖ சுற்றாடல் வைப்புப் பணம் பெற வேண்டிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ரூபா 409 மில்லியன் வருமானம் சேகரிக்க மதிப்பிட்டிருந்த போதும் முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை பெறுவனவும் உள்ளடங்களாக ரூபா மில்லியன் 414 சேகரிக்கப்பட்டு இருந்தது. மேலும் மீளாய்வாண்டில் மொத்த பில்லிடப்படலான ரூபா மில்லியன் 389 இலிருந்து மில்லியன் 230 மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தது. | வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி மற்றும் கடையறை வாடகை அறவிடவும், நீண்ட காலமாக அறவிடப்படாத மீதிகளிற்காக மாற்று (சட்ட) நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் வீதவரி பில்லிடலாக கணக்கீடு செய்திருந்த ரூபா 17,324,941 இனுள் ஏனைய 08 வகை வருமானங்கள் இருந்ததுடன் ஆண்டிறுதியில் வீத வரி மற்றும் ஏனைய சில வருமான வகைகள் உள்ளடங்களாக வீத வரி மற்றும் வரி நிலுவை ரூபா 4,541,574 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிடப்படாத நிலுவை வருமானத்தை அறவிட சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டினுள் வீதவரி உள்ளிட்ட நிலுவை வருமானத்தை அறவிட ஆதனங்களை தடை செய்யும் வேலைத் திட்டம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எதிர்காலத்தில் அனைத்து நிலுவை வருமானத்தையும் அறவிட அல்லது அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக மாற்று (சட்ட) முயற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய 243 ஆதன அலகுகளிற்காக ரூபா 19,031 ஏக்கர் வரி பில்லிடப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 9,834 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வரைவாக முயற்சி எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி வருமானத்தை அறவிடும் போது பல பிரச்சினைகளுக்கு சபைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. மீண்டும் ஆதனங்களை இனங்காணும் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் முன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

**2.3.5 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வாடகை ரூபா 4,572,298 ஆனதுடன் அது 1 – 5 வருட காலத்திற்கு இடைப்பட்டதாகும். | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வாடகையிலிருந்து தற்போது கனிசமான அளவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதியை அறவிட அல்லது அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக மாற்று (சட்ட) முயற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 37,760,755 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 85,302,296 ஆனது. | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண நிலுவை தொகையை பெற்றுக் கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவை பகுதி பகுதியாக அறவிடப்படுகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபை பொது மக்களிற்கு வழங்க வேண்டிய காணி மற்றும் ஆதனம், வீதிகள் மற்றும் பாதைகள் போன்ற சேவைகளை வழங்க உப விதி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இங்கு பெறும்பாலான விடயங்கள் 1990.03.02 வர்த்தமாணி அறிவித்தலின் படியான அங்கீகார உப விதிகள் மூலம் காப்படைவதுடன் சில விடயங்கள் தொடர்பாக விதிகள் மூலம் சாட்டப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| | | அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுகிறது. காப்படையாத விடயங்கள் தொடர்பில் உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் படி சபையினால் நிரைவேற்ற வேண்டியிருந்த நடவடிக்கைகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அது 2014 பெப்ரவரி 17 திகதிய PED/RED/01/04/2014/01 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். | தற்போது 2019 – 2022 வரை நான்கு ஆண்டு அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) ஒதுக்கீடு வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிரைவேற்ற வேண்டியிருந்த 99 செயற்பாடுகளில் 87 இற்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. | குறித்த கருத்திட்டத்திற்காக ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் நிதி நலைமை மற்றும் காணப்படும் அபிவிருத்தி தேவையின் முன்னுறிமையின் படி செலவு வேலைத் திட்டங்களை செயற்படுத்தியதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளிற்கும் ஒக்கீட்டை ஏற்பாடு செய்ய கவனம் செலுத்துகிறேன். |

**(ஈ) நோக்கத்திற்கு மாற்றமான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை தனது நோக்கங்களிற்கு மாற்றமாக நடைமுறைப்படுத்திய 04 செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன. | நோக்கங்களிற்கு மாற்றமாக செயற்படக்கூடாது. | காலத்திற்கு ஏற்றவாறு இனங்காணப்படும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் |

| | | |
|---|---|---|
| | | அவைகளை முடியுமான வரை சபையின் நோக்கங்களிற்கு பொருந்தும் வகையில் நிரைவேற்ற கவனம் செலுத்தப்படுகிறது. |

**(உ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 05 பலவேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ரூபா 1,972,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை. | செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான நிலமை ஏற்பட சுற்றாடல் / அரசியல் மற்றும் சமூக விடயங்கள் காரணமானது. எனினும் இச் செயற்பாடுகளிற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் செலவு விடய மாற்றலினூடாக புதிய அபிவிருத்தி செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தயவாய் சுட்டிக் காட்டுகின்றேன். |

**(ஊ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு 06 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ரூபா 10,750,000 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதும், திசெம்பர் 31 திகதியளவில் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்ளாது கைவிடப்பட்டிருந்தன. | திட்டம் தயாரிக்கப்படும் போர்து முக்கிய விடயங்கனை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கு இவ்வாறான நிலமை ஏற்பட சுற்றாடல் / அரசியல் மற்றும் சமூக விடயங்கள் காரணமானது. இச் செயற்பாடுகள் செலவு விடய மாற்றலினூடாக புதிய அபிவிருத்தி செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தயவாய் சுட்டிக் காட்டுகின்றேன். |

**(எ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 168.27 வர்க்க கிலோ மீட்டர்களுடன் | பிரதேசம் மற்றும் | கழிவுகளை ஒன்று சேர்க்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கூடிய பிரதேச சபை அதிகார எல்லையில் கழிவுகளை ஒன்று சேர்த்தல் வீதவரி பெறப்படும் 06 வலயங்களிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சபைக்கு சொந்தமாக கழிவு வெளியேற்றும் இடமொன்று இருந்த போதும் குறித்த இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. சபையின் கழிவு வெளியேற்றும் இடத்திற்கு நாளிற்கு 08 டொன்கள் அளவு கழிவுகள் ஒன்று சேர்வதுடன் சபை அதிகார எல்லையில் மலசல கழிவுகளை வெளியேற்ற பொருத்தமான இடமொன்றை இனங்கண்டிருக்கவில்லை. அவை தனிப்பட்ட காணியொன்றிற்கு வெளியேற்றப்படுகின்றன. | இடங்களை எல்லைபடுத்தாது குப்பைகளை ஒன்று சேர்க்க நடவடிக்கைகளை திட்டமிடப்பட வேண்டும். | போது வீதவரி பிரதேசங்களிற்கு மேலதிகமாக வீதவரி அல்லாத பெறுமளவு பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. அதனால் வீதவரி எல்லையிற்கு வெளியிலான பிரதேசங்களிலும் கழிவுகளை ஒன்று சேர்த்தல் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ii) | குப்பைவரி அறவிட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கழிவு முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவாக ரூபா 59,377,564 மற்றும் மூலதன செலவாக ரூபா 5,000,000 மதிப்பிடப்பட்டிருந்தது. அச் செயற்பாட்டிற்காக மீண்டுவரும் செலவாக ரூபா 55,795,186 மற்றும் மூலதன செலவாக ரூபா 805,165 செலவிடப்பட்டிருந்தன. | குப்பைவரி அறவிட மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் செலவிடப்படும் செலவுகளை ஒப்பிடுகையில் உயர் தரத்திலான சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டில் குப்பைவரி கட்டண மதிப்பீடு அறவிட முடியுமான கட்டணம் (2/43) இன் கீழ் பிரதிநிதிப்படுத்துகிறது. கழிவு முகாமைத்துவத்திற்காக மதிப்பிடப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன பெறுமானங்களிற்கு ஒப்பாக ஏற்பட்ட தேவையின் மீது குறித்த செலவு மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **(ஏ)** | **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**<br>--------------------------------------------------------- | | |
| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| | --------------------------------------- | ------------------ | -------------------------------------- |
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிதழிச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்ததுடன் அந் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் சில ஆரம்ப படிமுளைகளை சபை ஆரம்பித்திருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிற்குரிய செயற்பாடுகள், இலக்குகள் மற்றும் அளவீட்டு குறிகாட்டிகளை இனங்கண்டு குறித்த இலக்குகளை நோக்கி அன்மிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கம்மல்வத்த உப அலுவலக விளம்பர அறிவித்தல் வருமானம்**<br>தோப்புவ சந்தியிலிருந்து கொஸ்கஸ் சந்தி வரை விளம்பர அறிவித்தல் கட்டணம் அறவிடப்படாத பெறிய அளவிலான 11 விளம்பரப் பலகைகள் காணப்பட்டன. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயராளரின் 2013 செப்தம்பர் 30 திகதிய கடிதம் பிரகாரம் விளம்பர அறிவித்தல் பலகைகளை அமைக்க முறையான குழுவொன்றை நியமித்து பரிந்துரை பெற்று கணிப்பீட்டு நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொள்ளாததால் பெறுமளவு வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | உப விதியின் பிரகாரம் வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில விளம்பரப் பலகை உரியையாளர்கள் தொலைவில் வசிக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களிற்கு எழுத்து மூலம் அறிவித்து காசோலைகள் ஊடாக கட்டணம் அறவிடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இதன் பின்னர் விளம்பர பலகைகளை அமைக்க முறையான குழுவொன்றை நியமித்து பரிந்துரை பெற்று கணிப்பீட்டு நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொள்ளவும் குறித்த செயன்முறையை கடைபிடிக்கவும் பதிவேடுகளை நாலாதுவரையாக்கவும் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| **(ஆ) சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களிலிருந்து அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடல்**<br>வரி அறவிடும் போது மொத்த விற்பனையில் 0.5 சதவீதத்தை அறவிட உப விதி விதிக்கப்பட்டிருந்தது. வரி அறவிடுகையில் ஹோட்டல் நிர்வாகத்தினால் அறிவித்து அனுப்பப்படும் விற்பனையின் மீது வரி அறவிட்டிருந்ததுடன் சபையின் இந் நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை பெற்றிருக்கவில்லை.<br>கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட 02 ஹோட்டல்களில் தொடர்பாக குறைவாக அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 64,025 ஆனது. | உப விதியின் பிரகாரம் மொத்த விற்பனையில் குறித்த வரி சதவீதத்தை அறவிட வேண்டியதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் விற்பனை பிரகாரம் குறித்த அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது குறிப்பிடுவது போல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மேலும் இவ் ஹோட்டல்கள் தொடர்பாக நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(இ) வேலைகள் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) **கிரிமெடியான நூலத்திற்கு தளப்பரப்புக் கற்கள் பரத்துதல்** | | |
| கொடுப்பனவு அறிக்கையின் 03 ஆம் இலக்க வேலை விடயம் பிரகாரம் கொன்கிரீட் 0.42 $m^3$ கன மீட்டர்கள் பௌதீக ரீதியாக காணப்படாததால் ரூபா 6,672 மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் கொன்கிரீட் கன மீட்டர் அளவின் படி form work இற்காக செலுத்த முடியுமாகையால் ரூபா 7,095 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | சரியான அளவைகளை காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மேலுள்ள அளவைகளின் பிரகாரமே form work இற்கான அளவைகளும் கொடுப்பனவு அறிக்கையின் அளவைகளே கவனிக்கப்பட்டுள்ளன. |
| (ii) **நேர் ஊழய அடிப்படையின் கீழ் பாதைகள் ப்ரீமிக்ஸ் செய்தல்** | | |
| அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பம் வரை சபைக்கு சுவீகரிக்கப்படாத 01 அல்லது 02 வீடுகள் அமைந்துள்ள 08 தனியார் பாதைகள் ப்ரீமிக்ஸ் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 1,482,326 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | தனியார் பாதைகள் அபிவிருத்தி செய்ய கூடாது. | பாதைகளை சபைக்கு சுவீகரித்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மற்றும் அங்கீகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(ஈ) வீதி விளக்குகள் பழுதபார்த்தல் மற்றும் பராமரித்தல்**

| | | |
| --- | --- | --- |
| வீதி விளக்கு திருத்தத்திற்காக பயன்படுத்தும் 1852 விளக்கு தூண்களுக்கு இடப்படும் மின்குமிழ்களுக்காக ரூபா 562,020 மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 206,366 யினை செலுத்திருந்தது. இங்கு கோரிக்கை இல்லாமல் மற்றும் பதிவேடொன்றில் குறிப்பிடாத 1790 வீதி விலக்குகள் பழுதுபார்க்கப்பட்டிருந்தன. | பழுதுபார்தல் தொடர்பாக நாளாதுவரையாக பதிவேடுகள் பேணப்பட வெண்டும். | இவ் 1790 வீதி விலக்குகள் அங்கத்தவர்களினால் சுட்டிக்காட்டப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களாகும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விஷேட) பதவி பல வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டது. சபை மீளாய்வாண்டினுள் அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் 111 பேர்களை ஆட்சேர்த்து சபை நிதியத்திலிருந்து ரூபா 34,355,164 செலவிட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டினுள் ஆரம்ப நிலை பதவிகளில் 19 ஊழியர்களிற்காக சபை நிதியத்திலிருந்து செலவிட்டிருந்தது ரூபா 8,274,884 ஆன சம்பளத்தை மீள் நிரப்பிக் கொண்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்ப மற்றும் மிகையை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் அதிகார எல்லை பரப்பளவின் மீதான அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக ஊழியர் அளவு போதாது. ஆளணியின் பதவிகளை புதிதாக உருவாக்க அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதும் இது வரை அவ் அங்கீகாரம் கிடைக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபையினால் ஊழியர் கடன் பதிவேடொன்று பேணப்படாததால் கடந்த ஆண்டுகளில் சேவையை விட்டுச சென்ற, சேவை தடைக்குட்படுத்திய மற்றும் இடம் மாறிச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் தொடர்பான தகவல்களை உருதி செய்து கொள்ள முடியவில்லை. | ஊழியர் கடன் பதிவேடொன்றை நடாத்தி தொடர்பான அனைத்து தகவல்களை நாளாதுவரையாக்க வேண்டும். | தற்போது 2018 / 2019 / 2020 ஊழியர் கடன் பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டுள்ளது. சேவையை விட்டுச சென்ற ஆண் பெண் உத்தியோகத்தர்களின் 2020.06.20 திகதியில் உள்ளவாறான மீதிகளை அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 02 களஞ்சிய இடங்களும் பாதுகாப்பற்ற இடங்களாவதுடன், இருப்பு கட்டுப்பாடு தொடர்பான உள்ளக பரிசோதனை அல்லது உள்ளக கணக்காய்வோ மேற்கொண்டி இருக்கவில்லை. பொருட் பதிவேட்டு பண்டங்களை விநியோகித்தல் மற்றும் ஆவனப்படுத்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் மாதிரி பரிசோதனையின் பிரகாரம் 2016 முதல் 2018 வரை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட 05 மடிக்கனணிகள், முன்பள்ளி ஒன்றிற்கு வழங்கிய வர்ண பிரின்டர் | குறித்த இடங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் களஞ்சிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்த வேண்டும். | தற்போது பிரதான அலுவலகத்தல் களஞ்சிய வசதிகளிற்கான போதிய இடவசதிகள் போதாமையால் கம்மல்வத்த உப அலுவலக வளவில் இரண்டு களஞ்சியங்களை நடாத்திச் செல்வதுடன் அதன் பாதுகாப்பு அங்கு பொருத்தியுள்ள பாதுகாப்பு கெமெரா தொகுதியின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. எதிரகாலத்தில் கணக்காயவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைகள் சரி செய்ய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 01, நூலகம் மற்றும் உப அலுவலகங்கள் மேலும் விளையாட்டரங்குகளிற்கு விநியோகிக்கப்பட்ட DELL வகை 04 கணனிகள், மின்சார பிரிவிற்கு வழங்கிய அலுமினயம் ஏணி, 20 CDMA தொலை பேசிகள் மற்றும் 03 டொங்கல்கள் உள்ளடங்கின. இவை 2018 திசெம்பர் 31 திகதி பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 05 மடிக்கணனிகள் 2020 மார்ச் 02 திகதியன்றும் பொருட் பதிவேட்டிற்குட்படுத்தி இருக்கவில்லை. | | எடுக்கிறேன். |

**3.5 சொத்தக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்தக்கள் ஆவன்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிக்க செலவிடப்பட்ட செலவுகள் மாத்திரம் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இக் காணிகளின் தற்போதைய மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள விரைவாக நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டில் நீண்டகால வாடகை அடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு இருந்த 30 பர்ச்ஸ் அளவான காணித்துண்டிற்காக இரு தரப்பினரிற்கிடையில் குத்தகை உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | விரைவில் குத்தகை உடன்படிக்கையொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக பிரதான அமைச்சின் செயலாளரினால் மாகாண கல்வி பணிப்பாளரிற்கு ஏழுத்து மூலமாக அறிவூட்டியுள்ளதாக அறிவிப்பதுடன் தற்போது குத்தகை உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுமாறு அறிவித்து நினைவூட்டல் கடிதமொன்று மாகாண பணிப்பாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் சுவீகரிக்கப்படாத 53 ஆதனங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் அதற்குள் அலுவலகம், பொதுச் சந்தைகள், முன்பள்ளி, நூலகம் மற்றும் விளையாட்டரங்கு உள்ளடங்குகின்றன. மீளாய்வாண்டிலும் இவ் ஆதனங்களில் நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய ஆதனங்களை சுவீகரிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் ஆதனங்களை சுவீகரித்துத் தருமாறு பிரதேச சபையினால் இதற்கு முன் பல சந்தர்பங்களில் கோரப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்களில் விசாரிக்கும் போது குறித்த ஆதனங்களை பிரதேச சபைக்கு ஒப்படைக்க அளவைக் கட்டளை புத்தளம் நில அளவையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தற்போதும் முன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக தயவுடன் அறிவிக்கின்றேன். |

### 3.5.4 வருடாந்த பண்டக/இருப்பு கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டினூடாக அழிக்க மற்றும் ஏலவிற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்ட பண்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பராதீனம் செய்து கணக்குகளிலிருந்து அகற்ற வேண்டும். | 2019.12.31 திகதிக்கு உரிய பண்டக கணிப்பீட்டினூடாக ஏலவிற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்ட பண்டங்கள் 2020 மார்ச் மாதம் 06 திகதி கணிப்பீட்டு சபையொன்றின் முன்நிலையில் மேற்கொள்ளப்பட்டது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 33,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 04 விடயங்களுக்காக ரூபா 1,660,086 மாத்திரம் செலவு | ஏற்பாடுகளை பயன்படுத்தி வேலைகளை பூர்த்தி செயது கொள்ள வேண்டும். | எதிர் காலத்தில் தகவல்களை சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

செய்யப்பட்டிருந்ததில் எஞ்சியது ஒதுக்கீட்டின் 95 சதவீதமானது.

**4.2 உள்ளக கணக்காயவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 30 ஆம் பிரிவு மற்றும் நி.பி.133(1) பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தி அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளக கணக்காய்வின் மூலம் பெறும்பாளான துறைகளை உள்ளடக்கி வழங்கியிருந்த பரிந்துரைகளை தற்போது நடைமுறைப்படுத்தி உள்ளதுடன் மேலும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள பரிந்துரைகளை எதிர்காலத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**4.3 தீர்க்கப்படாத அவதானங்கள் மற்றும் பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புத் தொகையை செலுத்த தாமதித்தன் மீது மிகை அறவீடாக சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 326,355 தொடர்பாக குறித்த அலுவலரிடமிருந்து அறவிடுமாறு 2016 ஒக்டோபர் 13 ஆம் திகதிய கணக்கீட்டு செயற்குழு மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும், இது வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு செயற்குழு பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | கடந்த ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 08 கணக்கீட்டு குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது கடந்த ஆண்டு சுட்டிக்காட்டப்பட்டிருந்த அனைத்து கணக்கீட்டு குறைபாடுகளும் ஜர்னல் குறிப்புக்கள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆண்டில் வருமானமாக பதிவழிக்கப்பட்டுள்ள ரூபா 30,756,510 தொடர்பாக திரண்ட நிதியத்திற்கு பதிவழித்த தொகை பற்றி சபை மேற்கொண்ட நடவடிக்கள் கணக்காய்விற்கு அறிக்கை செய்யப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |